**// நினைவூட்டு -1 //** // மிக மிக அவசரம் //

சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை – **08.**

ந.க.எண். **2699**/அ**3/2023**, நாள். **26.12.2023.**

| | | |
|---|---|---|
| பொருள் | | பெற்றோர் ஆசிரியர் கழகம் – வருவாய் மாவட்டப் பெற்றோர் ஆசிரியர் கழக நிதிக்கு 2022–2023, 2023–2024 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய 5% தொகை அனுப்பக் கோருதல் – சார்பு. |
| பார்வை | 1 | அரசாணை (நிலை) எண். 242, நாள். 28.03.1994. |
| | 2 | **இவ்வலுவலக இதே எண்ணிட்ட 18.11.2023 நாளிட்ட கடிதம்.** |

**********

சென்னை வருவாய் மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களின் கனிவான கவனத்தை இச்செயல்முறைகள் வாயிலாக ஈர்க்க விழைகிறேன். பள்ளிகளில் உறுப்பினர் சந்தாவிலிருந்து 5 சதவீதத்தை கல்வி மாவட்டப் பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கு ஆண்டுதோறும் செலுத்தப்படவேண்டும் என்பது தாங்கள் அறிந்ததே. இருப்பினும் பல பள்ளிகளில் 2022-2023 ஆம் கல்வியாண்டிற்க்கான 5 சதவீத தொகையினை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் பதவி பெயரில் சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தங்களுடைய தொகை செலுத்தப்படாமல் உள்து.. ஆகவே, தாங்கள் 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கான பெற்றோர் ஆசிரியர் கழக தமது உறுப்பினர் சந்தாவிலிருந்து 5 சதவீதத்தை சம்பந்தப்பட்ட கல்வி மாவட்டப் பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்கு □□□□□□□□□ செலுத்திவிட்டு அதன் இரசீது நகலினை 24.11..2023 வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பார்வை 2 - ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் கோரப்பட்டது. ஆனால், மிகவும் குறைந்த அளவிலான பள்ளிகளிலிருந்து மட்டுமே விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

எனவே, **கீழ்க்காண் பட்டியலில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்கள்** 08.01.2024 **அன்று மாலை** 3.00 **மணிக்குள் உரிய தொகையினை செலுத்திவிட்டு இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்**. இதில் காலதாமதத்தினை தவிர்த்திடவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு பள்ளியிலும் தவறாமல் மாணவர்கள் எண்ணிக்கை விவரத்தையும் அனுப்பப்படவேண்டும். மேலும், ஒரு சில பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட விவரத்தில் ஒரு ஆண்டிற்கு மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது. எனவே, எந்த வருடத்திற்கும் விடுபடாமல் விவரங்களை அனுப்பிவைத்திடுமாறு அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

XXX ஒப்பம் ,,…………

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை – **08.**

பெறுநர்

அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி தலைமை ஆசிரியர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை) சென்னை மாவட்டம். ( தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது)